திருமறைநூல் நாடக வரிசை - 8

# மணப்பெண்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணப் பெண்

எழுதியவர்

எஸ். என். ஜே. மரியாம்பிள்ளை

General Editor :

Rev. Prof. N.M.SAVERI

நடகப் பிரதியாக்கப் பகுதி
திருமறைக் கலாமன்றம்

அட்டைப்படம் : ரமணி
படங்கள் : சாமி
வடிவமைப்பு : கணேஸ்

ISBN 955 - 9262 - 11 - 4

**CENTRE FOR PERFORMING ARTS**

# திருமறைக் கலாமன்றம்

## திருமறைநூல் நாடக வரிசை

## மணப் பெண்

திருமறைநூல் உலகப்பொதுமை வாய்ந்தது! பல் மொழி மக்களும் படித்து இன்புறும் தகமை வாய்ந்தது! அதில் ஆய்வுக்குரியவை ஆயிரமாயிரம் இருப்பினும், ஆழமான, ஆணித்தரமான, சிந்தனைகளைத்தூண்டும் அமுத ஊற்றாகவும் அது விளங்குகிறது.

இத்தகைய தலைசிறந்த இலக்கியத்தை நாடக வரிசை நூல்களாக்கி நற்றமிழ் உலகிற்கு நல்கவேண்டும் என்ற நல்லெண்ணம் நம்முள் பல்லாண்டு துளிர்த்திருந்தது. இளைய வயதினரும், முதியவரும், கற்றவரும், மற்றவரும் நாடக உருவத்தில் திருமறைநூலையும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற அக் கனவு இப்போது நிறைவு பெறத் தொடங்கியுள்ளது.

திருமறை நூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதிவரை தொடர்வரிசையில் எழுதி வெளியிடும் பணியைத் திருமறைக்கலாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ் அரும் முயற்சியினைத் தமிழ்கூறும் நல்லுலகம் தவறாது ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு உண்டு.

பேராசியர் நீ.மரியசேவியர் அடிகள்

*இயக்குனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

விசுவாசத்தின் விளை பொருளாக,
ஆபிரகாமின் மனைவி சாறாள்,
தனது தள்ளாத வயதிலும் பெற்
றெடுத்த தவப்புதல்வன் ஈசாக்
வாலிபமடைந் தான்.

தனது சந்ததி இன்னமும் அழிந்து விடக்
கூடாது என்பதில் என்னச் சுடர் கொண்ட
ஆபிரகாம், தான் வாழும் கானான் நாட்டில்
ஈசாக்கிற்குப் பொருத்தமான பேரெழில்
கன்னியர்கள் இரந்தபோதிலும், தனது பிறந்த
மண்ணான மொசப்பத்தேமியாவில்,
நாக்கோர் என்ற நகரில், தனது சகோதரன்
நாக்கோருக்கும் மெல்காளுக்கும் பிறந்த
மகனாகிய பந்துவேனின் மகள்
இரபேக்காள் என்ற குணச் சுடரை
ஈசாக்கிற்கு மணப்பெண்ணாகத்
தேர்ந்தெடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி 1





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணப் பெண்

## பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஆபிரகாம் | – | தந்தை |
| ஈசாக் | – | ஆபிரகாமின் மகன் |
| ஆபிரகாமின் ஊழியர் | – | ஆபிகாமின் ஊழியர் |
| இரபேக்காள் | – | ஈசாக்கின் மனைவி |
| தோழி | – | இரபேக்காளின் தோழிகள் |
| பத்துவேல் | – | இரபேக்காளின் தந்தை |
| லாபான் | – | இரபேக்காளின் சகோதரன் |

களம்: ஆபிரகாமின் கூடாரம்

பாத்திரங்கள்: ஆபிரகாம் : மேற்பார்வையாளன்,

*ஆபிரகாம் கூடாரத்துக்கு வெளியே இருக்கிறார் மேற்பார்வையரின் சற்று தள்ளி நிற்கிறான்.*

ஆபிரகாம்: *சாறாள்! என் அன்பே! நூற்றாண்டுகள் பல உன்னுடன் ஆனந்தமாக வாழலாம் என கனவு கண்டேனே. என் கனவுகளைப் பொய்யாக்கிவிட்டு நூற்றியிருபத்தேழு ஆண்டுகளில் மம்பிறேயின் இரட்டைக் குகையில் இடம் தேடிப் போய்விட்டாயே!*

மேற்பார்வையாளன்: *என் தலைவரே! இப்படியே அழுது, துக்கம் கொண்டிப்பதால், மாண்டவர் மீண்டும் உயிர்பெற்று வந்திடுவாரோ! மரணம். . .பிறந்த யாபேருக்கும் உரிமையல்லாவா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரகாம்: தத்துவம் பேசுகிறாய். ஆயினும், இந்நாட்டின் திராட்சை இரசத்தை விட இனிமையானவள் என் சாறாள். அத்தகைய எழில் நிரம்பப் பெற்ற வனப்புடையவள் இன்று என் அருகே இல்லை. இதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மேற்பார்வையாளன்: வாருங்கள் நேரம் போய்விட்டது. தங்கள் மகன் ஈசாக்கும், தங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

ஆபிரகாம்: என்னைத் தொந்தரவு செய்யாதே. எனக்குப் பசிக்கவில்லையென ஈசாக்கிடம் கூறிவிடு, சாறாளின் நினைவுச் சின்னம் அவன். அவனுக்கு எந்தக் குறையும் இருக்கக் கூடாது.

மேற்பார்வையாளன்: புரிகிறது தலைவரே! தங்களுக்கு தேவையானபோது அழையுங்கள். அடியேன் காத்திருக்கிறேன்.

**மேற்பாரவையாளன் உள்ளே செல்லுதல்.**

ஆபிரகாம்: சாறாள். . . .சாறாள். நம் இளமைக் காலம் மலடுகளாகவே கழிந்து விட்டது. ஊரார் எள்ளி நகையாட முதிர்ந்த காலத்தில் மகன் ஈசாக்கை பெற்றுத் தந்தாயே. பேரப் பிள்ளைகளுடன் கொஞ்சி மகிழ்வதற்கு முன் போய் விட்டாயே.

***ஆபிரகாம் அழுது கொண்டிருத்தல் - நிலவு மறைதல்.***

***திரை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 2





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம்: **ஆபிரகாமின் கூடாரம்.**

பாத்திரங்கள்: **ஆபிரகாம்: ஊழியன்: ஈசாக்.**

ஆபிரகாம்: மகனே ஈசாக். எனக்கும் வயதாகிவிட்டது. நான் இறப்பதற்கு முன் என் பேரக் குழந்தைகளைப் பார்க்க வேண்டாமா?

ஈசாக்: அதற்கென்ன அவசரம் அப்பா? நான் திருமணம் முடித்து விட்டால் உங்களை யார் கவனிப்பது. மேலும், அம்மா இறந்து கொஞ்சக் காலம் தானே ஆகிறது.

ஆபிரகாம்: மகனே! எனது கடைசிக் காலத்தில் என்னைப் பராமரிப்பதற்கு நீயிருப்பது போல், உன்னைப் பராமரிப்பதற்கும் பிள்ளைகள் தேவை தானே! எப்படியிருப்பினும், சொந்தப் பிள்ளைகள் போல் வருமா?

ஈசாக்: தந்தையே! உங்கள் விருப்பத்திற்கு நான் மறுப்புத் தெரிவிக்கப் போவதில்லை. தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதே என் கடன்.

ஆபிரகாம்: மகிழ்ச்சி மகனே, அம்மா இறந்த துக்கத்திலே பாதாளம் நோக்கி இறங்கிக் கொண்டிருந்த என்னை, உன் சம்மதத்தைக் கூறி வான் வெளிக்கே அழைத்துச் சென்று விட்டாய்.

ஈசாக்: அப்பா! நான் மந்தைகளை பார்க்கப் போகிறேன்.

**ஈசாக் வெளியேறல்.**

ஆபிரகாம்: ஊழியனே! விரைவாக வா. என் மகன் ஈசாக் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டான். நீ உன் கையை என் தொடையின் கீழ் வைத்து விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவராகிய கடவுள் மேல் ஆணையிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியன்: ஆகா! என் தலைவரின் முகம் இன்றுதான் மிகவும் பிரகாசமாக இருக்கிறது. தாங்கள் எது சொன்னாலும் நிறைவேற்றுவதே என் கடமை.

ஆபிரகாம்: இது கடமையல்ல. என் வீட்டிலுள்ள ஊழியர்களில் வயதில் மூத்தவனும் அனுபவத்தில் திளைத்தவனுமான உனக்குள்ள உரிமை.

ஊழியன்: அப்படியானால் இக் கானான் நாட்டிலேயே. . . . .

ஆபிரகாம்: கூடாது. . .கூடவே கூடாது. இக் கானான் நட்டிலேயோ, வேறெந்த நாடுகளிலேயோ என் மகனுக்கு பெண் கொள்ளக் கூடாது.

ஊழியன்: அப்படியானால். . . . .

ஆபிரகாம்: ஆம். . .என் சொந்த நட்டிலேயே, அதுவும் எனது உற்றாரிடம் இருந்தே என் மகனுக்கு பெண் கொள்ள வேண்டும்.

ஊழியன்: தலைவரே! ஒரு சந்தேகம்.

ஆபிரகாம்: எதுவாயிருந்தாலும் தயக்கமின்றிக் கேள்.

ஊழியன்: சில வேளை மணப்பெண் என்னோடு இந்நாட்டிற்கு வர மனமில்லாவிடில், தாங்கள் விட்டு வந்த அந் நாட்டிற்கு தங்கள் மகனைக் கூட்டிக் கொண்டு போகலாமா?

ஆபிரகாம்: இல்லை. என் மகனை அந்த நாட்டிற்கு அழைத்துச் செல்லக் கூடாது. ஏன் தெரியுமா? என் தந்தை வீட்டிலிருந்தும் நான் பிறந்த நாட்டினின்றும் என்னை அழைத்து வந்த விண்ணக ஆண்டவராகிய கடவுள் இக்கானான் நாட்டை என் இனத்தாருக்கு தருவதாக வாக்களித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியன்: அப்படியென்றால்?

ஆபிரகாம்: அந்த விண்ணக தந்தையே உனக்கு முன் தம் தூதனை அங்கு அனுப்பி வைப்பார். நீ புறப்படும் பொழுது வெறுமையாகப் போக வேண்டாம்.

ஊழியன்: புரியவில்லையே!

ஆபிரகாம்: நமது மந்தையிலிருந்து சிறந்த பத்து ஒட்டகங்களைத் தெரிந்து அவற்றின் மேல் நம்மிடமுள்ள எல்லாப் பொருட்களிலும் சிலவற்றை எடுத்துக் கொண்டு போ. நீ திரும்பி வரும் நாளை நான் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன்.

**ஊழியன் முழங்காலில் இருந்து**

ஊழியன்: என் தலைவன் ஆபிரகாமின் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எனக்குத் துணையாயிருந்து, என் தலைவன் ஆபிரகாமுக்கு கருணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றேன்.

ஆபிரகாம்: நான் பிறந்த நாடு மொசப்பத்தேமியாவில் உள்ள நாக்கோர் என்னும் நகர். சரி புறப்படும். கடவுள் உம்மோடிருப்பார்.

**ஊழியன் போதல்.**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 3





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம்: நாக்கோர் நகரக் கிணற்றடி.

பாத்திரங்கள்: ஊழியன்: இரபேக்காள்: தோழி 1: தோழி 2:

கிணற்றின் பக்கத்தில் அமர்ந்திருக்கும் ஊழியன் தூரத்தே தண்ணீர் எடுக்கவரும் பெண்கள்.

ஊழியன்: இறைவா! நான் தண்ணீர் குடிக்கும்படி குடத்தை சாய்த்துக் கொடுத்தும், நீரும் குடியும், உம் ஒட்டகங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் காட்டுவேன் என்று எவள் மறுமொழி சொல்லுவாளோ அவளே உம் ஊழியனாகிய ஈசாக்கிற்கு உம்மால் நியமிக்கப்பட்டவள் என நான் அறிந்து கொள்வேன்.

மூன்று பெண்கள் நீர் மொற்ற வருதல்.

தோழி 1: இரபேக்காள்! உங்கள் பெரிய தகப்பனாரின் பெயர் என்ன?

இரபேக்காள்: ஏனடி கேட்கிறாய்? அவர் பெயர் ஆபிரகாம். கானான் தேசத்தில் இருப்பதாக அப்பா சொன்னார்.

தோழி 2: ஏனடி. உங்க பெரியப்பாவிற்கு பிள்ளைகளே கிடையாதா?

இரபேக்காள்: 99 வருடங்கள் பிள்ளையில்லாமல் இருந்தார்களாம், பெரியப்பாவிற்கு 100 வயது நடக்கும்போது ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

தோழி 2: அப்படியென்றால், பேரழகியும், ஆண்தொடர்பும் அறியாத எழிலுற்ற கன்னியுமாகிய உனக்கு மாப்பிள்ளை இருக்கிறாரென்று சொல்.

இரபேக்காள்: போடி, அவரை நான் இதுவரை பார்க்கவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 1: ஆபிரகாமின் சகோதரனாகிய நாக்கோருக்கும், மெல்காளுக்கும் பிறந்த மகனாகிய பத்துவேலின் புதல்வியே! அதோ கிணற்றடிக்கு சற்றுத் தூரத்தில் யாரோ ஆடவன் நிற்கிறான். உன் காதலன் தானோ என்னவோ?

இரபேக்காள்: சீ! பேசாம வாங்கடி. பொழுது சாய்வதற்குள் போய்விட வேண்டும்.

ஊழியன்: அம்மணிகளே! தூர இடத்திலிருந்து வருகின்றேன். தண்ணீர் முடிந்து விட்டது. குடிப்பதற்கு. . . கொஞ்சம் தண்ணீர். . .

இரபேக்காள்: இதோ குடியுங்கள் . . .காணுமா? ஐயா, உம் ஒட்டகங்களெல்லாம் குடித்துத் தீருமட்டும் தண்ணீர் மொண்டு காட்டுவேன்.

ஒட்டகங்களுக்கு தண்ணீர்த் தொட்டியில் நீரை நிறைக்கிறாள் இரபேக்காள். அது முடிந்தபின்.

ஊழியன்: மகளே! இதோ இரண்டு சீக்கல் நிறையுள்ள பொற்காதணி. இது பத்து சீக்கல் நிறையுள்ள காப்புகள். அணிந்து கொள்.

இரபேக்காள்: மிகவும் நன்றி ஐயா.

தோழி 2: ஐயா! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

ஊழியன்: கானான் தேசத்திலிருந்து என் தலைவராகிய ஆபிரகாமின். . .

தோழி 1: என்னது? ஆபிரகாமா? அப்படியாயின் அவரது சகோதரன் நாக்கோரா?

ஊழியன்: ஆமாம் உங்களுக்குத் தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 2: தெரியுமா, என்ன? இதோ உங்களுக்கு தண்ணீர் கொடுத்தாளே, இந்த அழகு தேவதைதான் நாக்கோரின் பேத்தி.

ஊழியன்: அப்படியா? பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி. மகளே! உங்களுடைய வீட்டில் தங்குவதற்கு இடமுண்டா?

இரபேக்காள்: ஐயா! எங்கள் வீட்டில் நீங்கள் தங்குவதற்குப் போதுமான இடமும் இருக்கிறது. அத்துடன் தங்களது ஒட்டகங்களுக்கான வைக்கோலும், காய்ந்த புல்லும் மிகுதியாக இருக்கின்றது. வாருங்கள் போகலாம்.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 4





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் : **பத்துவேலின் வீடு - மாலைப்பொழுது.**

பாத்திரங்கள் : **பத்துவேல்: லாபான்: இரபேக்காள்: ஊழியன்.**

**பத்துவேலின் வீட்டிற்கு வெளியே, ஆபிரகாமின் ஊழியன் நிற்றல். பத்து வேலின் மகன் லாபான் அவரைக் கூப்பிடுதல்.**

லாபான் : ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே, உள்ளே வா. ஏன் வெளியே நிற்கிறாய்? நான் வீட்டையும், ஒட்டகங்களுக்கு இடத்தையும் தயார் செய்கின்றேன்.

**ஊழியன் உள்ளே வருதல்.**

பத்துவேல் : கையை கழுவுங்கள், முதலில் சாப்பிடுவோம்.

ஊழியன்: மன்னிக்க வேண்டும். வந்த காரியத்தை சொல்லு முன் சாப்பிடமாட்டேன்.

லாபான் : சரி, உங்கள் இஷ்டம்.................

ஊழியன்: நான் ஆபிரகாமின் ஊழியன். என் தலைவரை ஆண்டவர் மிகவும் ஆசீர்வதித்து அவர் செல்வந்தராகும் படி ஆடுமாடுகளையும் பொன், வெள்ளி உடமைகளையும், ஊழியர்களையும், பணிப்பெண்களையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார்.

பத்துவேல் : பெரியப்பாவின் செல்வச் செழிப்பைப் பற்றி நாங்களும் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஊழியன்: அது மட்டுமல்ல வயது சென்ற என்தலைவருக்கு அவரின் மனைவியாகிய சாறாள் ஆண் குழந்தையொன்றை பெற்றுக் கொடுத்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துவேல் : கேள்விப்பட்டோமே தவிர அவரின் புதல்வனை பார்க்க முடியவில்லை.

ஊழியன்: அழகிய தோற்றம் கொண்ட அவனின் பெயர் ஈசாக். தனக்குள்ள யாவற்றையும் ஈசாக்கிற்கு கொடுத்திருக்கிறார். இனிமேல்தான் மிகவும் முக்கியமான விடயத்தை சொல்லப் போகின்றேன்.

லாபான் : சொல்லுங்கள், அவர்களைப் பார்க்கத்தான் முடியவில்லை, அவர்களின் செய்திகளையாவது கேட்போம்.

ஊழியன்: தனது மகன் ஈசாக்கிற்கு திருமணம் செய்ய நினைத்து கானான் தேசத்திலே. . . .

பத்துவேல் : என்ன. . . . கானான் தேசத்திலா பெண்கொள்ளப் போகிறார். பிறந்த நாட்டை விட வாழும் நாடா பெரிதாகப் போய்விட்டது.

ஊழியன்: அதற்குள் அவசரப்படுகிறீர்களே! கானான் நாட்டுப் பெண்களுக்குள்ளே என் புதல்வனுக்குப் பெண்கொள்ளாதே! என்று கூறினார்.

லாபான் : அப்பாடா. . மொசப்பத் தேமியா பாக்கியம் செய்தது. இனம் இனத்தைத் தானே நாடும் ...ம்... நீங்கள் கூறுங்கள்.

ஊழியன்: ஆனால் எக்காரணம் கொண்டும் தன் மகனை இங்கே விடமாட்டார். பெண் தான் அங்கு வரவேண்டும். பெண் கொடுக்க மறுத்தால் தன்னுடைய சாபத்திற்கு நான் ஆளாக மாட்டேன் என்றும் கூறினார்.

பத்துவேல் : அப்படியாயின் பெண்களைப் பார்த்துவிட்டீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியன்: பார்த்தேன். என் தலைவரின் அழகிய மகனுக்கேற்ற பேரழகியைக் கண்டேன்.

லாபான் : யார் அந்தப் பேரழகி?

ஊழியன்: வேறு யாருமல்ல. அவரின் இரத்தத்தின் இரத்தங்களான உங்களின் மகளே!

பத்தவேல் : என்னது! எனது மகளா?

ஊழியன்: நீங்கள் என் தலைவருக்குத் தயவு காட்டி அவர்மேல் விசுவாசமுள்ளவராய் இருக்கிறீர்களோ? கூறுங்கள். உங்களுக்கு வேறு எண்ணமிருந்தால் அதையும் சொல்லுங்கள். அப்பொழுதுதான் நான் திரும்பிச் செல்ல இயலும்.

லாபான் : இந்த வாக்கு ஆண்டவராலே வந்தது. அவரது திருவுள்ளத்துக்கு விரோதமாய் நாங்கள் உனக்கு வேறொன்றும் சொல்ல மாட்டோம்.

பத்துவேல் : இதோ இரபேக்காள் உன் முன் இருக்கிறாள். அவளை அழைத்துக் கொண்டு போ. ஆண்டவர் சொன்னடியே அவள் உன் தலைவருடைய புதல்வனுக்கு மனைவி ஆகக் கடவாள்.

ஊழியன்: ஆகா. . .மகிழ்ச்சி ஆபிரகாமின் கடவுள் எனக்கு உதவி செய்து விட்டார். என் காரியங்களை சுலபமாக்கி விட்டார். இதோ என் தலைவருடைய அன்பளிப்புகள். . . பொன், வெள்ளிப் பாத்திரங்கள், ஆடைகள்.

பத்துவேல் : இந்த மகிழ்ச்சிக்காக வாருங்கள் விருந்து கொண்டாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி இருளடைதல் - இரவாகி விட்டதற்கான குறியீடுகளைப் பயன்படுத்தி மீண்டும் விடிவது மாதிரி ஒளி பெறச் செய்தல்.

ஊழியன்: ஐயா! என் தலைவரிடம் போக உத்தரவு கொடுங்கள்.

லாபான் : இவள் பத்து நாட்களுக்கேனும் இங்கு இருக்கட்டுமே. அதன் பின் புறப்பட்டுப் போகலாமே.

ஊழியன்: ஆண்டவர் என் பிரயாணம் வெற்றியடையச் செய்தாரே, ஆதலால் நீங்கள் என்னை தாமதப்படுத்தாதீர்கள். என் தலைவரிடம் இந்த நற்செய்தியை உடன் தெரிவிக்க வேண்டும்.

பத்துவேலு : மகனே இரபேக்காளைக் கூப்பிடு.

இரபேக்கா வருதல்.

மகளே! இம்மனிதனோடு கூடப் போகிறாயா?

இரபேக்காள் : புரியும்படியாகக் கூறுங்களேன்.

பத்துவேலு : நம் பெரிய தந்தை ஆபிரகாமின் மகன் ஈசாக்கிற்கு உன்னை பெண் கொள்ள வந்திருக்கிறார். புரிகிறதா?

இரபேக்காள் : அப்பா இத்தனை வருட காலமும் உங்கள் சொல்லை மீறி நடந்திருக்கின்றேனா? நீங்கள் கூறினால் நான் சந்தோசமாகப் போவேன். ஆனால் அப்பா, உங்களை யெல்லாம் விட்டுச் செல்வதை எண்ணும் போதுதான் . . .தாங்க முடியவில்லை.

பத்துவேலு : பெண்ணாகப் பிறந்து விட்டால், புருஷன் வீட்டிற்குப் போவது தானே முறை. வீட்டில் வாழா வெட்டியாக வைத்திருக்க முடியுமா? சரி புறப்படு மகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபான் : ரெபேக்காள்! என் அன்புத் தங்கையே! நீ ஆயிரமாயிரம் மக்களுக்குத் தாயாகும் பேறுபெறுவாய். உன் சத்தியாரும், தங்கள் பகைவரின் நகர வாயில்களை உடமையாக்கிக் கொள்வார்கள். சந்தோசமாகப் போய்வா.

**ஊழியன் - ரெபேக்காள் போதல்.**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 5





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் : ஆபிரகாமின் கூடாரம் - மாலை நேரம்.

பாத்திரங்கள் : ஈசாக்: இரபேக்காள் : ஊழியன் : ஆபிரகாம்.

ஈசாக் கூடாரத்துக்கு வெளியே உலவிக் கொண்டிருக்கிறார் - தூரத்தில் சிலர் ஒட்டகங்களில் வருதல்.

இரபேக்காள் : அதோ அந்தக் கூடாரத்துக்கு வெளியே உலவிக் கொண்டிருக்கும் அந்த மனிதன் யார்?

ஊழியன்: அவர்தான் என் தலைவர் - உனது மணவாளன் ஈசாக்.

இரபேக்காள் முக்காடிட்டு தன் முகத்தை மூடுதல். ஊழியன் நடந்த விடயங்களை ஈசாக்கிடம் சொல்லி விட்டு கூடாரத்துக்குள் போதல்.

ஈசாக் : இரபேக்காள் என்ன உன் அழகு! என் அன்பே முகத்திரைக்குப் பின்னால் இருக்கின்ற உன்னுடைய கண்கள் வெண்புறாக்கள். உனது கருங்கூந்தல் கலாத் மலைச்சரிவில் செல்லும் வெள்ளாட்டு மந்தையை ஒத்துள்ளது. இரபேக்காள் ஏதாவது பேசேன்.

இரபேக்காள் : பேச முடியவில்லையே! தங்களது கம்பீரமும், அழகும் என்னை ஆட்கொண்டு விட்டதே. தங்களை கணவனாகக் கிடைக்க நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

ஈசாக் : அன்பே உன்னைச் சந்தித்த சில கணப்பொழுதில் என் தாயின் மரணத்தினாலே ஏற்பட்டிருந்த துயரம் பெரும்பாலும் தணிந்து போயிற்று. வா; அப்பா பார்த்துக் கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூடாரத்து வாசலில் ஆபிரகாம் நிற்கிறார்**

ஈசாக்: அப்பா, இதோ உங்கள் மருமகள்.

ஆபிரகாம்: மகனே ஈசாக், மகளே இரபேக்காள். இதுதான் சாறாளின் கூடாரம். உள்ளே போங்கள்.

**திரை**

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Published By :*
**CENTRE FOR PERFORMING ARTS**
238, Main Street,
Jaffna.
Sri Lanka.

**ISBN 955 - 9262 - 11 - 4**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளியீடு

**CENTRE FOR PERFORMING ARTS**

திருமறைக் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY : SHARP GRAPHICS (PVT) LTD. COLOMBO - 12. TEL : 078 60567